DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC –01/2024

Prosecution witness – PW 3

Name : திரு.தினேஷ்ராஜா Caste:

Father's Name : Calling:

Village : Religion:

Taluk : Age:

(Accused produced.)

05.12.2024– 04.45 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் கடலாடியில் குடியிருந்து கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் MCA படித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா.

2. கடந்த 2022ம் ஆண்டு சம்பவத்தின்போது சிவகாசியில் உள்ள காளீஸ்வரி கல்லூரியில் BCA படித்து வந்தேன். விருதுநகரில் தங்கியிருந்தேன்.

3. கடந்த 26.11.2022ம் தேதி எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை என்பதால் எனது அம்மா விருதுநகருக்கு அழைத்து வந்தார்கள்.

4. பின்னர் நாகர்கோவில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். விருதுநகர் வீட்டில் இருந்தபோது எது பெரியம்மா வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதாக தகவல் சொன்னார்.

5. பின்னர் உடனடியாக கிளம்பி வீட்டிற்கு வந்தோம். வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. வீட்டிற்குள் இருந்த பீரோவும் உடைக்கப்பட்டிருந்தது. எனது அம்மாவிடம் விசாரித்தபோது அவர் பீரோவில் வைக்கப்பட்டிருந்த கம்மல், டாலர் செயின், மோதிரம், பணம் ரூ.50,000/– ஆகியவை திருடப்பட்டிருப்பதாக சொன்னார்.

6. பின்னர் காவல் நிலையம் சென்று எனது அம்மா புகார் அளித்தார். பின்னர் 1–1/2 மாதம் சென்று எங்கள் வீட்டில் திருடப்பட்ட நகை மற்றும் பணத்தை கண்டுபிடித்து விட்டதாக போலீசார் சொன்னார்கள்.

7. எனது அம்மா நகைகளையும், பணத்தையும் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்றார். எனது அம்மா காவல் நிலையத்தில் வைத்து திருடிய நபரை பார்த்தார்கள். அவர் பெயர் சேவுகராஜ் என்று சொல்லக்கேட்டு தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

இல்லை.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)